# திராவிடப் போராளிகள் 23

## ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

# உரையின் இலக்கணம் இந்திராணி!



ஓவியம் : ரவிபேலட்

*1932*-ஆம் ஆண்டு நவம்பர் 17 -ஆம் தேதி, பர்மாவின் ரங்கூன் நகரில் சாரத விலாச சபை மண்டபத்தில் **'சுயமரியாதை இயக்கம்'** என்ற தலைப்பில் உரையாற்றினார் **இந்திராணி பாலசுப்ரமணியம்.**

''தோழர்களே! மனித வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக பழைய மார்க்கத்தைத் திருத்தியோ அல்லது அனுகூலமான வேறு கொள்கைகளை உணர்த்தியோ பரப்புங்காலத்தில் எல்லா நாடுகளிலும் மாரடிப்பும் கூப்பாடும் ஓலமும் கொண்ட எதிர்ப்புகள் இருந்துதான் வந்தன என்பதை சரித்திர வாயிலாய் அறிகின்றோம்.

புத்தர், சாக்ரட்டீஸ், இயேசு கிறிஸ்து, முகமது நபி, மார்ட்டின் லூதர், கபிலர், சித்தர்கள், லெனின் முதலானவர்கள் தத்தம் கொள்கைகளைப் பரப்பின காலத்தில், அவர்கள் பட்ட இம்சையை இங்கே சொல்லவும் வேண்டுமோ? அதே மாதிரியாக இராமசாமியையும் (பெரியார்) அவர்களுடைய இயக்கத்தையும் என் போன்ற சகாக்களையும் நிர்மூலப்படுத்தி விடுவதாகவும் கொன்று விடுவதாகவும் இரத்தம் தோய்த்து எழுதப்பட்ட சிகப்புக் கடிதங்கள் பல வந்தன. சுயமரியாதைக்காரர்களாகிய நாங்கள் இந்த மிரட்டலுக்கும் பூச்சாண்டிக்கும் அஞ்சமாட்டோம். உயிரையும் விடத் தயார். இதைத் தூக்கு மேடை மீதிருந்தும் சொல்லுவோம் என்று சொன்னோம்".

இது அவரது அருவி போன்ற உரையின் ஒரு சிறு பகுதியே. திராவிட இயக்கத் தொண்டர்களின் அடிப்படை இலக்கணம், அஞ்சாமையும், தன்னல மறுப்புமாகும். இதற்குச் சான்றாக எத்தனை ஆண்களைக் காட்டமுடியுமோ அதற்கு ஈடாகவும் அவர்களை விடக் கூடுதலாகவும் உழைத்து வரலாறு படைத்த பெண்களின் சாதனைகளால் நிறைந்ததுதான் திராவிட இயக்கம். இந்திராணி பாலசுப்ரமணியம் என்ற போராளியின் வாழ்வும் பணியும் அதற்குச் சான்றாகும்.

### உரைக்கு இலக்கணமான உரை!

சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க காலம் முதல் உடன் வரும் பெயர்களில் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்களின் பெயர் தனிச்சிறப்பைப் பெற்றது. அவர் பங்கு கொண்டு உரை நிகழ்த்திய ஒவ்வொரு மாநாடும் சமூக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிகழ்வுகளாகும்.

1930-ஆம் ஆண்டு ஈரோட்டை கிடுகிடுக்கச் செய்தது இரண்டாவது சுயமரியாதை மாநாடு. அந்த மாநாட்டின் செயலாளர்களில் ஒருவர் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள். அவரது உரை, எழுச்சி உரையின் இலக்கணமானது.

1931-ஆம் ஆண்டு விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாநாட்டில் பெண்கள் அரங்கின் தலைமையேற்று உரையாற்றிய இந்திராணி அம்மையாரின் உரையைக் குறிப்பிட்டுப் பாராட்டி தந்தை பெரியார் அவர்கள் 'குடிஅரசு' இதழில் தலையங்கம் தீட்டினார்.

மிகக் குறுகிய காலத்திலேயே வெளிநாடு வாழ் தமிழர்களிடம் சென்று உரை நிகழ்த்தினார்.

> **அடக்குமுறைகள் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் பெரியாரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி, நாடு முழுவதும் நடந்த பல்வேறு கூட்டங்களில் முழங்கினார் இந்திராணி அம்மையார்.**

மேலே குறிப்பிட்டுள்ள ரங்கூன் உரையின் இடையிலேயே **'ரங்கூன் இந்து சோசியல் கிளப்'**பில், **'பெண் உரிமையும் சுயமரியாதையும்'** என்ற தலைப்பில் ஆற்றிய உரையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் இந்திராணி அம்மையார்.

### பெரியாரால் பாராட்டும் முக்கியத்துவமும்

14.9.1947 கடலூர் புதுநகரில் கூடியது **'திராவிட நாடு' பிரிவினை மாநாடு.** அரசாங்கத்தின் அடக்குமுறை, சனாதனிகளின் எதிர்ப்பு, இவற்றோடு பெருங்காற்றும் மழையுமாய், மாநாட்டுப் பந்தலே சரிந்து, மீண்டும் புதுப்பிக்கப்பட்டு எழுச்சியுடன் நடந்தது. பேரணியில் ஒரு கோச்சு வண்டியில் பெரியார், அவருடன் டாக்டர்.ஏ.கிருஷ்ணசாமி மற்றும் முத்தையா ஆகியோர் அமர்ந்து வந்தனர்.

மற்றொரு கோச்சு வண்டியில் திருமதி இந்திராணி பாலசுப்ரமணியம், அவரது கணவர் பாலசுப்ரமணியம் மற்றும் டி.எஸ்.நடராசப் பிள்ளை ஆகியோர் அமர்ந்து வந்தனர் என்று செய்தி வெளியிட்டது 'குடிஅரசு' ஏடு. இந்தச் செய்தியின் மூலம் இந்திராணி அம்மையார் பெரியார் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் மட்டுமல்ல, இயக்க நிகழ்வுகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தார் என்பதும் விளங்குகிறது.

### திராவிட அரசியலில் முன்னணி

திராவிடர் இயக்க மேடைகள் மட்டுமன்றி திராவிட அரசியலை முன்னெடுத்த ஒவ்வொரு நிகழ்விலும் அம்மையார் பங்கு பெற்றார். 20.1.1946, சென்னையின் புகழ்பெற்ற மெமோரியல் அரங்கத்தில் பெருங்கூட்டம். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் இருவரையும் கொலைப்பழி, பொய் வழக்கில் இருந்துவிடுவிக்க வேண்டும் என இங்கிலாந்தின் அரச நீதிமன்றத்துக்கு (PRIVY COUNCIL) வேண்டுகோள் வைப்பதற்காகக் கூடியிருந்தது. சென்னையின் முன்னாள் மேயர் இராதாகிருஷ்ணன் தலைமையில், பேரறிஞர் அண்ணா உரையாற்றினார். உடன் உரையாற்றியவர்களில் ஒருவர் இந்திராணிபாலசுப்ரமணியம் அவர்கள்.

திராவிட இயக்கத் தொண்டர்களின் தியாகத்துக்குச் சான்றாகவும், இந்திய அரசியல் தலைவர்களைப் பதற்றம்கொள்ள வைத்ததுமான ஒரு போராட்டத்தை 1957 -ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் நடத்திக் காட்டினார் பெரியார்.

இந்திய அரசியல் சாசனத்தில் சாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளைக் கொளுத்தும் போராட்டம். அதையொட்டி பெரியாரை வேறொரு வழக்கில் கைது செய்து சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அடக்குமுறைகள் உச்சத்தில் இருந்த அந்தக் காலகட்டத்தில் பெரியாரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி, நாடு முழுவதும் நடந்த பல்வேறு கூட்டங்களில் முழங்கினார் இந்திராணி அம்மையார். 16.3.1958 அன்று சென்னை மயிலாப்பூரில் நடந்த கண்டனக் கூட்டத்தில் உரையாற்றியோர் அன்னை மணியம்மையார், ஆசிரியர் கி.வீரமணி மற்றும் இந்திராணி பாலசுப்ரமணியம் அவர்கள்.

பொது வாழ்க்கை நிகழ்வுகளின் பட்டியல் மட்டும்தானா இந்திராணி அம்மையாரின் வாழ்க்கை? இல்லை. அன்பும் காதலும் கொள்கையும் ஊடலும் கலந்து கிடந்தது அவரது வாழ்வு. அவரது காதல் கணவருடன் இணைந்து அவர் வாழ்ந்த சுயமரியாதை வாழ்வைப் பற்றி பெரியார் ஒரு கட்டுரையே எழுதினார் என்றால் சும்மாவா?

(வருவார்கள்...)

---

## ஃப்ளாஷ்பேக்



இந்த மகிழ்ச்சிச் செய்திகளுக்கு இடையே நாகையில் நிதியளிப்புப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், என் மகளை அழைத்துக் கொண்டு தலைவர் கலைஞரைச் சந்திக்கச் சென்றேன். 32 ஆயிரம் ரூபாய் நிதியை அவரிடம் வழங்கி விட்டு, மகளுக்குப் பெயர் வைக்கச் சொல்லிக் கேட்டேன். 'அஞ்சுகம்' என்று பெயர் வைத்தார் தலைவர் கலைஞர். மகளின் பெயர் சொல்லி அழைக்கும் போதெல்லாம் கலைஞரின் ஞாபகம் வந்துவிடும்.

**-நாகை அசோகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், திருவாரூர்.**



அசோகன்

### தாயே மகளாக!

1993-ஆம் ஆண்டு, கழகம் நெருக்கடியைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து சின்னமும் கொடியும் தி.மு.கழகத்துக்கே சொந்தம் என்ற தீர்ப்பு வெளியானது. 1994-ஆம் ஆண்டு

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## இடஒதுக்கீடும் ஐ.ஏ.எஸ்.ஸும்!

**ஒ**ன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசின் காலத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக எழும் குரல்களைப் போல வேறு எப்போதும் எழுந்ததில்லை. அதில் மேலும் நெய் ஊற்றுவதாக அமைகிறது, உயர் சாதி ஏழைகளுக்கான இடஒதுக்கீடு. ஒரு பக்கம், 'இடஒதுக்கீட்டில் அரசுப் பணிகளுக்கு வருபவர்களால் தரம் குறைகிறது' என்று சொல்லிக்கொண்டே, இன்னொரு பக்கம் பொருளாதாரத்தில் நலிந்த உயர் சாதியினருக்கு இடஒதுக்கீட்டை வழங்கும் தந்திரத்தை பா.ஜ.க. திட்டமிட்டே மேற்கொள்கிறது.

இந்நிலையில், 'அமெரிக்கன் ஜர்னல் ஆஃப் பொலிட்டிக்கல் சயின்ஸ்' எனும் பிரபல ஆய்விதழில், 'குடிமைப் பணிகளின் செயல்பாட்டுத் திறனை இடஒதுக்கீடு பலவீனப்படுத்துகிறதா' என்ற பொருளில் ஓர் ஆய்வுக் கட்டுரை வெளியாகி உள்ளது. அதில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பது குறித்து தேசிய அளவில் ஆய்வு செய்யப்பட்டது. அதன் முடிவுகள், இடஒதுக்கீட்டுக்கும் அதிகாரிகளின் செயல்பாட்டுத் திறனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதோடு, பல இடங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளிலிருந்து வந்த அதிகாரிகளே மிகச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்கின்றன. மேலும், ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் அந்த அதிகாரிகள் பெற்ற தர வரிசைக்கும், களத்தில் அவர்கள் காட்டும் செயல்பாட்டுத் திறனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆய்வுகள் இப்படிச் சொன்னாலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த அதிகாரிகள் தங்கள் பணிகளைச் சரியாகச் செய்வதில்லை என்ற பொதுப்புத்தி இருந்துகொண்டே இருக்கிறது. தலைமைச் செயலாளர், கூடுதல் செயலாளர், இணைச் செயலாளர் போன்ற உயர் பதவிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை வெறும் 7 சதவிகிதமாக மட்டுமே இருக்கிறது என்பதும், இந்தச் சமூகங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் பல நேரம் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

---


## கருவூலம்

### குளித்தலைத் தேர்தல்!

**1957- ஆம் ஆண்டு, கழகத்தின் ஆணையினை ஏற்று குளித்தலை தொகுதியில் நின்றார் கலைஞர். அவரது ஃபியட் கார், 'முரசொலி' அலுவலகத்தின் பழைய வேன், இவைதான் தேர்தல் பிரச்சார சாதனங்கள். மிகக் குறைவான கழகக் கிளைகள், கழகக் கருத்துகள் பரவிட இயலாத பல சிற்றூர்கள், கழகக் கொடி பறக்க முடியாத இடங்கள், சில இடங்களில் திராவிடர் கழக இயக்கத்தினரும் ஆதரிக்க முடியாத நிலை. வெள்ளியணை என்கிற ஊரில் தி.மு.க. என்றால், என்னவென்றே மக்களுக்குத் தெரியாது. மகாத்மா காந்தியடிகள் மறைந்த செய்தியே தெரியாமலிருந்த சிலரும் அப்பகுதியில் இருந்தனர். அப்படியான பகுதிகளைத் தனது அரசியல் பிரசாரம் மூலம் வென்று காட்டினார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 155




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.